# ஜீவகாருண்ணிய விளக்கம்.

(கூழிபிறைச் சிவனடியார் திருக்கூட்டம்.)

## வந்துவிட்டது பங்குனித் திருவிழா! வதைக்கலாமா?

நாம் எந்த வகையில் பிறவுயிர்களைக் கொன்றாலும் பாவம் நம்மை யடைகிறது; ஆதலால் எவ்வுயிர்களையும் கொல்லலாகாது என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அங்ஙனமிருக்க நாம் சாமியின் பெயரைவைத்து ஆடு கோழிகளை வதைக்கலாமா? அப்படி வதைத்தால் இவற்றைக் கொன்ற பாவத்தோடு நம் முன்னோர் கட்டளையைக் கடந்த பாவமு மன்றோ நம்மைச் சேரும். ஒரு கெட்ட காரியத்தைச் செய்துவிட்டு அதற்கு இரண்டு வகையிலா தண்டனை யடைவது? கூடாது கூடாது. அத்தகைய காரியங்களை மனத்தாலும் நினைக்கக் கூடாது. உடனே ஒழிக்க வேண்டும். ஆடு கோழிகளை வெட்டிப் பலியிடும் கெட்ட பழக்கத்தை இப்பொழுதே ஒழியுங்கள். பிறரையும் தடுக்க பெரும் முயற்சி செய்யுங்கள். நெய்யைச் சொரிந்து ஆயிரக்கணக்கான யாகங்களைச் செய்வதைவிட ஒருயிரையுங் கொல்லாமலும், அவற்றிற்கு எந்த வகையிலும் துன்பஞ் செய்யாமலுமிருப்பதே சிறந்த புண்ணியம் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இதனை மனத்திற் பதித்துக் கொள்ளுங்கள்.

## பலியிடாதீர்கள்.

அன்பர்களே!

பொங்கல் வந்துவிட்டது! ஆடு கோழிகள் அலறுகின்றன!! அநியாயமாக அவைகளை வெட்டி வீழ்த்தாதீர்கள் !!!

ஏழைப் பிராணிகளாகிய ஆடு கோழிகள் நமக்கு என்ன கெடுதல்கள் செய்தன? தெய்வ சந்நிதானத்திலே அவைகளை நாம் எதற்காக மடக்கிக் கொண்டு கழுத்தறுத்தல் வேண்டும்?

இது நல்லது; இது கெட்டது என்று பகுத்தறியக்கூடிய ஆறறிவுள்ள மக்களாகிய நாம், ஐந்தறிவுடைய சிற்றுயிர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்க, அவைகள் வம்சத்தைக் கருவறுக்கலாமா?

மக்களாகிய நமக்கு இரக்கமன்றோ பிரதானம். இரக்கமின்றேல் நமக்கும் மற்ற உயிர் வகைகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது? எள்ளளவும் இரக்கமில்லாது, உயிர்ப் பிராணிகளைக் கத்தரிக்காய் வாழைக்காயை நறுக்குவதைப்போல் கதறக் கதறக் கழுத்தறுப்பது நியாயமாகுமா? ஒரு வருடத்தில் ஒரு நல்ல நாளில் சுவாமிக்குப் பொங்கலிட்டுப் புதுவாழ்வு பெற விரும்பினால், அப்புண்ணிய தினத்திலே எதற்காக ஆடு கோழிகளை யறுத்து அநியாயப் பாவத்தைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்? பாற்பொங்கலிட்டுப் பானகம் வைத்தாற் பத்தாதா? சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்யக் கூடாதா? அன்பால் கசிந்துருகி வணங்குவதன்றோ அறம். ஆதலால் உயிர்ப் பலியிடுவதை நிறுத்துங்கள்; சகல நலமும் உண்டாகும்.

## பலி நீக்கப் பாட்டு.

பலியிட்டுப் பாபம் செய்யாதீர்—சுத்தப்
பாற்பொங்க விட்டுப் படைத்துண்ணுவீரே
என்ன மதியீது சொல்வீர்—தேவி
ஈஸ்வரி பேருக்கு ஈனஞ்செய் கின்றீர்
ஆடுதா வென்றுகேட்டாளோ?—தேவி
அறுத்தே யரித்துநீர் தின்னுமென்றாளோ?
கோழிதா வென்றுகேட்டாளோ?—அதைக்
கொலைசெய்து பசிதீர உண்ணுமென்றாளோ?
பாற்பொங்கல்வேண்டாமென்றாளோ?-தேவி
பலியிட்டுக்கொடும்பாபம்செய்யுமென்றாளோ?
பலியிட்டுப் பலியிட்டு நீங்கள்-பெற்ற
பலனைத்தான் சொல்லுங்கள் என்னென்று
[கேட்போம்
தலைவலி காய்ச்சல்க ளில்லையோ—அந்தோ
சாவுதா னில்லையோ? துன்பங்க ளில்லையோ?
நரம்புச் சிலந்திக ளில்லையோ?—உங்கள்
நயமான கண்கட்கு வலிவந்த தில்லையோ?
என்ன வரம் பெற்றீர்?—நீங்கள்
இட்டபலி யெல்லம் எதற்கென்று மதித்தீர்
சுகதுக்கம் செய்வினைப் பயனும்—அதைத்
தொலைத்திடப் பலியிட்டு முடியாது கண்டீர்
அவிசொரிந் தாயிரம் வேட்டல்—தனினும்
உயிர்செகுத் துண்ணாமை நன்றென்றார் பெரி
போனது போகட்டும் மக்காள்—இனிப் [யார்
பொல்லாக் கொலைதனைப் புரியா திருப்பீர்.

## ஆடு கோழிகளை அறுக்காதீர்கள்.

அன்பர்களே!

அநியாயமாக ஏழை ஆடு கோழிகளை அறுக்காதீர்கள். அவைகள் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தன? அவைகள் பாடு கடவுளாற் கொடுக்கப்பட்ட பசும்புல்லையும் தண்ணீரையும் அருந்திவிட்டு ஒருவருக்கும் தீங்கு செய்யாது சும்மாவன்றோ திரிகின்றன? இவ்வாறிருக்க அவற்றில் தாயலறப் பிள்ளையையும், பிள்ளையலறத் தாயையும் பிடித்து எள்ளளவும் இரக்கமின்றிக் கழுத்தறுப்பது நியாயமாகுமா? அப்படிக் கழுத்தறுக்கும் பாவம் நம்மை எளிதில் விடுமா? கம்பளி மூட்டையாகவன்றோ நம்மைச் சுற்றும். யானை தன தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதைப்போல், ஏன் பாவத்தை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்? நாம் போன ஜென்மத்தில் செய்த பாவங்களால் இந்த ஜென்மத்தில் அநுபவிக்கும் கஷ்டங்கள் போதாதா? மேலும் வருகின்ற ஜென்மத்திற்குமா பாவ மூட்டையினை வருந்தித் தேடிக் கொள்ளுதல் வேண்டும்? வேண்டாம்! வேண்டாம்!! அன்பர்களே! முன் செய்த தீவினையைத் தீர்த்துக்கொள்ள வழி தேடினாற் போதும்! இனிமேல் தீவினையைத் தேடுதல் வேண்டாம்! எந்தக் காரணத்தை முன்னிட்டும் உயிர்க் கொலை புரிய வேண்டாம்! எங்கும் சுத்த ஆராதனையே செய்யுங்கள்! சிறு தெய்வங்கட்கு ஆடு கோழி யறுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொள்ளாதீர்கள்! அபிஷேகஞ் செய்யுங்கள்! பிதுரர்களுக்கு உங்கள் வீடுகளிலே படைக்கும்பொழுதும் ஆடு கோழிகளை அறுக்காதீர்கள்! பாற்பொங்கலிட்டுப் பக்தி செய்யுங்கள்! உண்டு ஊனைப் பெருக்குதற்காக ஒருயிரையுங் கொல்லாதீர்கள்! கத்தரிக்காய், வாழைக்காய் முதலிய சாகபக்ஷணங்களையே சாப்பிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கும் ஊனுணவை ஊட்டாதீர்கள்! எல்லோரும் சைவமாயிருங்கள்! இவ்வாறு ஒருயிர்க்குந் தீங்கிழையாத உயரிய விரதத்தை மேற்கொள்ளுவீர்களானால் உங்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகும்.

## மனிதர் வாய்ப்படும் பிராணிகளின் முறையீடு.

எல்லாரும் பண்டிகை பண்டிகை என்று கொண்டாட்டமடைய, நாங்கள் ஐயோ! ஐயோ!! என்று திண்டாட்டப்படுவதா? எல்லாப் பண்டிகைகளும் எங்கள் உயிருக்குத்தானா வர வேண்டும்?

ஐயா புண்ணியவான்களே! அம்மா புண்ணியவதிகளே!! நீங்கள் பிள்ளை குட்டிகள் பெற்றவர்களல்லவா? உங்களுக்கு ஜீவிரக்கமில்லையா? நீங்கள் சுகமாய் வாழ விரும்புவதுபோல, நாங்களும் வாழ வேண்டாமா? வேண்டாம்! வேண்டாம்!! எங்களை ஹிம்சிக்க வேண்டாம்!!! கொலைகாரர்களாக வேண்டாம்! எங்கள் வயிற்றெரிச்சல் வீணாய்ப் போகுமா? எங்கள் தீவினை உங்களைத் தீண்டாமல் விடுமா? எங்கள் குடி கெடுத்த உங்கள் குடி சீர்படுமா? தெய்வம் சாக்கிட்டு, பண்டிகைப் பேரைச் சொல்லி உங்கள் பாழ் வயிற்றை நிறப்ப எங்களைக் கொல்லாதிருங்கள்! அதனால் உங்களுக்குப் புண்ணிய முண்டாகும்; புகழுண்டாகும்; சொர்க்கமுண்டாகும்; குடும்பம் விருத்தியடையும். அநேக கோடி நமஸ்காரம்.

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு 11-வது அத்தியாயம்

மகாத்மாகாந்தி தொடர்ச்சியாக 'நவஜீவன்' பத்திரிகையில் எழுதிவரும் தமது ஜீவிய சரிதையாவது:—

ஜன சமூகத்தில் எவரும் ஒருவித உபயோகமுமில்லாமல் இருந்து வருவது எப்பொழுதும் எனக்குப் பிடிக்கவில்லை. சமூகத்தினிடத்திலுள்ள மாசுகளை நிவர்த்தி செய்யாமல் அவர்களிடத்திலுள்ள குறைகளை மறைத்துச் சொல்லுவதாவது அல்லது அவர்களுடைய உரிமைகளை வற்புறுத்துவதாவது எனக்கு விருப்பமில்லை. ஆகையால் நான் நேட்டாலில் குடியேறியது முதல் இந்திய சமூகத்தின் மீது சிறிது ஆதாரத்துடன் சொல்லப்பட்டு வந்த பழியை நிவர்த்திசெய்ய நான் முயற்சி செய்து வந்தேன். இந்தியர்கள் தங்களுடைய வீடுகளையும், அவைகளைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில்லையென்றும், அவர்களுடைய பழக்கங்கள் மெதுவலானவைகளாக இருந்து வருகின்றனவென்றும் அடிக்கடி புகார் சொல்லப்பட்டு வந்தது. இந்திய சமூகத்தில் முக்கியஸ்தர்களாயிருந்தவர்கள் தங்களுடைய வீடுகளிலிருந்த குறைகளை நிவர்த்திசெய்து கொண்டு வந்தார்கள். ஆனால் டர்பானில் பிளேக் பரவிவிடும் போலிருந்த காலத்தில் தான் வீடுவீடாகச் சென்று பார்வையிட சாத்தியப்பட்டது. எங்களுடைய ஒத்துழைப்பை விரும்பிய முனிசிபல் கவுன்சிலர்களைக் கலந்து கொண்டும், அவர்களுடைய அனுமதியைப் பெற்றும் இந்த வேலையிலிறங்கினேன். நாங்கள் ஒத்துழைத்ததால் அவர்களுடைய வேலை சுளுவாகி விட்டதுடன், எங்களுடைய கஷ்டங்களும் குறைவாயின. ஏனெனில் ஏதேனும் ஒரு தொத்து வியாதி வியாபித்து வருகையில் நிர்வாகிகள் பொறுமையை இழந்து அநியாயமான காரியங்களைச் செய்து விடுவதுடன், அவர்களுடைய அதிருப்திக்குப் பாத்திரமானவர்கள் மீது கடுமையான முறைகளைப் பிரயோகித்துவிடுவது சகஜமாக இருக்கிறது. இந்திய சமூகத்தார் வலுவிலேயே சுகாதார மேன்பார்வையை மேற்போட்டுக் கொண்டதால், அவர்களுடைய கொடுமை இல்லாதொழிந்தது.

இருந்தாலும் எனக்கும் சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன. என்னுடைய சமூகத்தினருடைய உரிமைகளுக்காக நான் போராடுகையில் அவர்களுடைய ஒத்துழைப்பை நான் பெற்ற அளவு அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்படி தூண்டுவதில் நான் பெற முடியவில்லை. சில இடங்களில் என்னை அலக்ஷியம் செய்தார்கள். தங்களுடைய வீடுகளையும், வீடுகளைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதற்கு வரிந்து கட்டிக்கொண்டு நிற்பது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. இந்த வேலைக்காக அவர்களே பணத்தைத் தேடிக் கொள்ளும்படி செய்வது முடியாதகாரியமாக இருந்தது. அதிகப் பொறுமையில்லாவிடில் அவர்களைக்கொண்டு இந்த வேலைகளைச் செய்ய வைக்க முடியாதென்று எனக்கு அனுபவத்தில் தெரியவந்தது. சீர்திருத்தக்காரர்கள் தான் சீர்திருத்தத்தைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் சமூகத்தினர் எதிர்ப்பையும், வெறுப்பையும், கசப்பையும் தான் காட்டுகிறார்கள். சீர்திருத்தக்காரர்களுக்கு அவசியமாகத் தோன்றுகிற முறைகள் ஜன சமூகத்தினருக்குப் பிற்போக்கான காரியங்களென்று தோன்றலாமன்றோ?

இருந்தாலும் இந்தக் கிளர்ச்சியின் பலனாக இந்திய சமூகத்தினர் தங்களுடைய வீடுகளையும், தங்களுடைய வீடுகளைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஒருவாறு உணரலாயினர். அதிகாரிகளுடைய நன்மதிப்பிற்கு நான் பாத்திரமானேன். நான் எவ்வளவு என்னுடைய சமூகத்தினருடைய உரிமைகளுக்காகவும், பாத்தியங்களுக்காகவும் போராடினேனோ அந்த அளவு ஆத்ம சுத்தியிலும் எனக்கு சிரத்தை இருந்துவந்ததை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இருந்தாலும் அங்கு குடியேறியிருந்த இந்தியர்களுக்குத் தாய்நாட்டின்பால் உள்ள கடமையை நினைப்பூட்ட வேண்டிய வேலை பாக்கியிருந்தது. இந்தியாவோ ஏழ்மை தேசம். இந்தியர்கள் திரவியம் சம்பாதிக்கவே தென்னாப்பிரிக்காவில் குடியேறினர். அவர்களுடைய தாய்நாட்டினர் கஷ்டப்படுகையில் அவர்களுடையவருமானத்தில் ஒரு பாகத்தை அவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருந்தனர். 1897-ம் வருஷத்தில் இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டது. 1899-ம் வருஷத்தில் இன்னும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. தென்னாப்பிரிக்காவிலிருந்த இந்தியர்கள் 1897-ம் வருஷத்தில் இந்தியாவின் பஞ்ச நிவாரணத்திற்காக உதவி செய்ததைவிட அதிகமாக 1899லுத்தில் உதவி செய்தனர். வெள்ளைக்காரர்களும் உதவிசெய்ய வேண்டுமென்று நாங்கள் வேண்டிக்கொண்டோம். அவர்களும் தாராளமாக உதவிசெய்தனர். ஒப்பந்தக் கூலிகளாக வந்திருந்த இந்தியர்களும் தங்களுடைய சக்தியானுசாரம் உதவிசெய்தனர். அந்தப் பஞ்சகாலங்களில் ஆரம்பித்த ஏற்பாடு இன்னமும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. நமது தேசத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்படுங்காலங்களில் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்வதில் பின் தங்கியதில்லை.

இவ்விதம் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் செய்த ஊழியமானது பல உண்மைகளை எனக்குப் புலப்படுத்தியது. சத்தியமானது ஒரு பல விருக்ஷத்தைப்போன்றது. அதை எவ்வளவுக் கெவ்வளவு நாம் போற்றி வளர்க்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அது பலனைக் கொடுக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு சத்தியத்தின் விசேஷத்தைக் கண்டறிய நாம் முயற்சிசெய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மறைந்துகிடக்கும் அதன் விசேஷங்கள் வெளிப்படுகின்றன. அதாவது, உபகாரம் செய்யக் கூடிய பல வழிகள் வெளிப்படுகின்றன.

# பல திரட்டு.

## ஆக்ஷேப மனு.

ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரவர்கள் மறுபடியும் திருநெல்வேலி ஜில்லா போர்டு அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததை ரத்து செய்யுமாறு திருநெல்வேலி சப் கோர்ட்டில் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீமான் கோபாலஅய்யர் மனுக் கொடுத்திருக்கிறார். விசாரணை மார்ச்சு மீ 4 உ.

## மதுரைக் கோயில்.

மதுரை ஸ்ரீமீனாக்ஷி கோயில் அர்த்த மண்டபத்துள் பிராமணர்கள் மட்டும் போகலாமென்றிருந்ததை இம் மாதம் முதல் பிராமணர் உள்பட யாரும் அர்த்த மண்டபத்திற்கு வெளியில் நின்று தான் சுவாமி தெரிசனம் செய்ய வேண்டுமென்பதாக தேவஸ்தான அதிகாரிகளால் உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

## புதிய மில்.

“பாண்டியன் மில்” எனும் பெயருடன் பிப்ரவரி மீ 6 உ முதல் மதுரையில் நூல் ஆலை யொன்று திறக்கப்பட்டிருக்கிறது. 20முதல் 24நம்பர்வரை அந்த நூற்கப்படுகிறதாம். தினமானம் 10 பேலகள் வரை உற்பத்தி செய்யப்படுகின்றன.

## திருச்செந்தூர் கோயில்.

திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணியர்கோயிலில் மூலமண்டபம் வரை சென்று சுவாமி தெரிசனம் செய்ய தங்கட்கு உரிமையுண்டென்றும், இம்மத சுதந்திரத்தை கோயில் அதிகாரிகள் தடைப்படுத்தக் கூடாதென்றும் வாணியர்கள் ஜில்லா ஜட்ஜியினிடம் வழக்குத் தொடுத்தார்கள். இதில் வாணியர்களுக்கு அநுகூலம் கிடைக்கவே கோயில் அதிகாரிகள் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கின்றனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பிராமண பிராமணரல்லார் பிணக்கு.

"பறையரோடு
தீயரிந்து புலையருக்கும்
விடுதலை."

—பாரதியார்.

(மொழியூர் நக்கீரனார்.)

"சிவராத்திரியன்று புலையர்களை கள்ளிக்கோட்டையிலுள்ள தீயர்களின் கோயிலில் நுழைய அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானித்ததால் மனவெறுப்புற்று அக்கோயிலின் தர்மகர்த்தாக்கள் நால்வர் ராஜிநாமா கொடுத்து விட்டனர். மற்ற சாதியார் தீயர்களைப் புறக்கணித்தல் எங்ஙனம் கொடுமையோ அங்ஙனமே தீயர் புலையரைக் கழிப்பதும் கொடுமையே என்று பலவேறு கூறியும் அந்நால்வரும் நெஞ்சு உருகினார்களில்லை. கள்ளிக்கோட்டையில் புலையருக்கும் கோயில் உரிமை கொடுக்க இது வரை ஒருவரும் முயன்றதில்லை. ஆகலின் இம்முயற்சியின் பயன் எவ்வாறு முடியுமோ என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்" என ஹிந்து பத்திரிகைக்கு அதன் நிருபர் சென்ற சனிக்கிழமை எழுதியிருக்கிறார்.

வலியார் மெலியாரை வாட்டுதலும் அவர் தம்மின் மெலியாரை நசுக்குவதும் நம் நாட்டில் வழக்கமாகி விட்டன. இக் கொடுமை சேர நாட்டில் மட்டும் அல்ல. பாண்டிய நாட்டிலும் உண்டு.

சில சான்றுகள் கொடுப்பேன். வேளாளர் மதுரை முதலிய சில ஊர்களிலுள்ள கோயில்களில் கர்ப்பக்கிரகம் மட்டும் செல்வதற்காக இப்போது முயன்றுகொண்டுவருகிறார்கள். ஆனால் தங்கள் பல சொந்தக் கோயிலினுள் மற்ற பிராமணரல்லாச் சாதியாரை விடுவதற்கு மறுக்கிறார்கள்.

வழக்க ஒழுக்கங்களில் எள்ளளவும் தாழ்வில்லாத பிராமணரல்லாதாரிலே சிலருக்கு சம உரிமை தர மறுத்துவிட்டு, வேளாளர் பிராமணருடன் தமக்குச் சம உரிமை வேண்டுமென்று போராடுகின்றனர்.

"வட நாட்டில் கோயிலுரிமை எங்களுக்கு இருக்கிறது. தென்னாட்டிலும் இருந்தது. இடையில் பிடுங்கிக் கொள்ளப்பட்டது" என்று நாடார்கள் சொல்லி வருகிறார்கள். வட நாட்டில் நமக்குள்ள உரிமைக்கும் பாண்டி நாட்டில் உள்ள உரிமைக்கும் உள்ள வேற்றுமையை ஊன்றி ஆராய்தல் வேண்டும். வட நாட்டிலும் நம் உரிமை பிராமணர் உரிமையினுங் குறைந்ததே. பாண்டி நாட்டிலும் அவ்விதமே. பின்னர் இரண்டுக்கும் என்னதான் வேற்றுமை?

வட நாட்டிலோ வேளாளருக்கு ஒத்த உரிமை நமக்கும் உண்டு. பாண்டி நாட்டில் நம் உரிமை வேளாளர் உரிமையினும் குறைவுபட்டிருக்கிறது. இது ஒன்றே வேற்றுமை.

ஆகவே பாண்டி நாட்டில் நமக்கு கோயிலுரிமை வேண்டும் என்பதின் பொருள் வேளாளரையொத்த உரிமை வேண்டும் எனபதே. அதற்கு வேளாளரும் பிராமணரல்லாதசாதியாருமே முக்கியமாய்த் தடை செய்து வருகிறார்கள். ஏனெனில், தென் தேசத்தில் வேளாளரை ஒத்த உரிமை நாடார்களுக்கும் உண்டு என்பதில் பிராமணருக்கு ஒரு வித சம்பந்தமும் கிடையாது. வேளாளர் தடுப்பதற்கு உட் காரணம் பிராமணச் சூழ்ச்சியே என்பாருமுளர்.

உட் காரணங்களைப்பற்றி எவரும் திட்டமாக ஒன்றும் கூறமுடியாது என்பது என் கொள்கை. உட் காரணம் பிராமணரே எனக் கொள்ளினும் வெளிக் காரணம் பிராமணரல்லாதாரே என்பது வெளிப்படை.

இந்த இடத்தில் இன்னொரு விஷயம் எழுத விரும்புகிறேன். பிராமணப் புரோகிதரின் கொடுமை யாவரும் அறிவோம். ஆயின் வேளாளப் புரோகிதரும் கொடுமையில் அவர்களுக்கு இளைத்தவரல்லர் என்பதே நான் சொல்ல விரும்புவது.

தென் பாண்டி நாட்டில் நாடார்கள் தாங்கள் வாழும் பல ஊர்களில் தங்களுக்குச் சொந்தமான சில கோயில்களில் பிராமணப் புரோகிதர்களையொப்ப வேளாளப் புரோகிதர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வகையில் செய்யும் காரியங்களில் பிராமணப் புரோகிதர்களைக் காட்டிலும் ஏனைய புரோகிதர்கள் சற்றும் விட்டுப்போனவர்களல்ல

ஆனால், இக்கொடுமைகள் பிராமணன் செய்தால் சீற்றங் கொள்கிறோம். பிராமணன் செய்தாலும் சரியே, வேளாளன் செய்தாலும் சரியே, ஒரு சாதியை ஒரு சாதி இழிவு படுத்தக் கண்ட இடத்து சீற்றங் கொள்ளுதலே நடுவு நிலைமையுள்ளோரின் கடனாகும்.

# புலனடக்கம்.

III

புலனடக்கமற்ற நல்வாழ்வு இவ்வுலகில் எப்போதும் இருந்ததில்லை; இருக்க முடியாது. புலனடக்கத்தினின்று வேறான நல்வாழ்வை மனதினால் கற்பனை செய்வதும் இயலாத காரியம். நல்வாழ்வு என்னும் மேன்மாடிக்குச் செல்ல விரும்புவோன் புலனடக்கம் என்னும் முதற்படியில் ஏறியேயாதல் வேண்டும். ஆனால், இப்புலனடக்கமும் ஒரே யடியாகப் பெறக்கூடியதன்று. இதை யடைவதிலும் ஒரு வரிசைக்கிரமம் உண்டு.

* *

மனிதன் ஆசைகளினின்றும் விடுதலைபெறுதலே புலனடக்கமாகும். புலனடக்கமெனினும், அவாவறுதல் எனினும் ஒன்றேயாம். ஆனால் ஆசைகளோ பல; ஒன்றல்ல, இரண்டல்ல. எனவே, ஆசைகளுடன் போராடி வெற்றிகொள்ள விரும்புவோன் முதலில் பிரதானமான, அடிப்படையான ஆசைகள் மீது கருத்தைச் செலுத்த வேண்டும். ஆசைகளில் இருவகையுண்டு. பிரதான ஆசைகள், ஒருவகை; அவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த இரண்டாந்தர ஆசைகள் மற்றொருவகை. உடல் அலங்காரம், வேடிக்கை விநோதம், வம்புப் பேச்சு முதலியவைகளில் ஆசைகள் பிந்தியவகையைச் சேர்ந்தவை. பெருந்திண்டி அவா, சோம்பர் பற்று, காமவிகாரம் இவைகள் பிரதான வகையைச் சேர்ந்தவை. எனவே அவாவறுத்தலில் வெற்றிபெற விரும்புவோன் முதலில் பிரதான ஆசைகளுடன், அதிலும் வரிசைக் கிரமமாகப் போர் தொடங்கவேண்டும். இந்த வரிசைக் கிரமத்தை இயற்கை விதிகளை யொட்டிய அறிவினால் ஆராய்ந்து நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

* *

பெருந்திண்டி தின்போன் சோம்பரை எதிர்த்து வெற்றிபெற முடியாது. இவ்விரண்டு தீக்குணங்களுமுள்ளவன் காமத்துடன் போர்தொடங்கவே இயலாது. எனவே, அவாவறுத்தல் முயற்சியானது முதன் முதலில் பெருந்திண்டியை யொழிப்பதிலேயே தொடங்குகிறது. அதாவது உபவாசத்தில் ஆரம்பமாகிறது. பண்டைக் காலத்தில், சன்மார்க்க [illegible] வகுத்த மகான்கள் எல்லோரும் இதைத்தான் சொன்னார்கள். ஆனால் இக்காலத்திலோ, நல்வாழ்வுக்கு முதற்படியான புலனடக்கத்தின் அவசியத்தை நாம் மறந்துவிட்டது போலவே, புலனடக்கத்துக்கு முதற்படியான உபவாசத்தின் மகிமையையும் மறந்துவிட்டோம். உபவாசமிருத்தல் அசட்டுத்தனமென்றும் மூட நம்பிக்கை யென்றும், முற்றும் அநாவசியமென்றும் கருதுகிறோம். உண்மையோ வென்றால், நல்வாழ்வின் முதல் நிபந்தனை அவாவறுத்தல் ஆதல்போல், அவாவறுத்த வாழ்வின் முதல் நிபந்தனை உபவாசமேயாகும்.

* *

உபவாசத்தைக் கைக்கொள்ளாத ஒருவன் நல்லவனாயிருக்க விரும்பலாம்; நல்வாழ்வைப் பற்றிக் கனவுகாணலாம். ஆனால் உபவாசமின்றி நல்லவனாயிருத்தல்—நல்வாழ்வு நடத்தல்—ஒருக்காலும் இயலாதவை. நடந்து செல்ல விரும்பும் ஒருவன் முதலில் எழுந்து நிற்கவல்லவா வேண்டும்? நல்வாழ்வுக்கு உபவாசம் இன்றியமையாதது என்பது நித்தியமான ஒருவிதி. அவ்வாறே பெருந்திண்டியும் எக்காலத்தும் தீய வாழ்விற்கு அறிகுறியாயிருந்து வந்திருக்கிறது. ஆயினும் அந்தோ! இத்தீய குணத்துக்கு அடிமையாகாத மனிதர் இக்காலத்தில் மிக அரியர். தற்காலத்திய பணக்கார மத்தியதர வகுப்புகளைச் சேர்ந்த மனிதர்களைப் பாருங்கள்! அவர்களுடைய ஒப்பிய கன்னங்களும், சதைபோட்டு கொழுத்த அவயவங்களும், பருத்த தொந்திகளும் என்ன காட்டுகின்றன? நமது ஜனசமூகத்தில் மிகப்பெரும்பான்மை யோருக்கு வாழ்க்கையில் முதன்மையான நோக்கமாயிருப்பதென்னவென்று கூர்ந்தாராயுங்கள். வயிறு நிரம்பத் தின்பதெப்படி என்பதே யல்லவா? ஆம் ஏழைகள் பணக்காரர்கள் எல்லாரும் வாழ்க்கையில் பெரிய இன்பமென்று கருதுவது நாப்புலனைத் திருப்திசெய்து வயிற்றை நிரப்புதலே யாகும். ஏழைத் தொழிலாளர் தங்கள் வறுமையின் காரணமாக இப்பெருந்திண்டிப் பேய்க்கு இரையாகாதிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சாவகாசமும், பணமும் கிடைக்கும்போது பணக்காரர்களைப் போலவே நாவுக்கினிய பண்டங்களை வயிறு புடைக்கத் தின்று குடிக்கப் பின் வாங்குகிறார்களில்லை. எவ்வளவுக்குப் பெருந்திண்டி தின்கிறோமோ அவ்வளவுக்கு இன்ப மனுபவிப்பதாக நினைத்துக் கொள்கிறோம்! இது மட்டுமன்று. வயிற்றை நிரப்பும் அளவுக்கு உடம்பு வலிமையும் சுகமும் பெறுவதாகவும் எண்ணிக்கொள்கிறோம்! அந்தோ மடமையே!

* *

பணக்காரர்களுடைய வாழ்வு முறையைப் பாருங்கள்! அவர்களுடைய சம்பாஷணையைச் செவிகொடுத்துக் கேளுங்கள்! எத்தனை யெத்தனை உன்னதமான இலட்சியங்களைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள்? தத்துவம், சாஸ்திரம், கலை, பாட்டு, செல்வநிலை, பொதுநலம், இளைஞர்களின் கல்வி முதலிய பல பொருள்கள் அவர்கள் பேச்சில் நடமாடுகின்றன! ஆனால் அவர்களுடைய வாழ்வு முறையை உற்று நோக்கினாலோ இவ்வளவு பேச்சும் வெறும் வேஷம் என்று தெரிய வரும். எல்லாம் போஜனங்களுக்கு இடைவேளைகளில் தான்; வயிறு நிரம்பியிருக்கும் போதுதான்; இனி ஒரு பருக்கையும் உள்ளே போகாதென்றிருக்கும் போதுதான். வாழ்வில் முதன்மையான காரியம் உணவருந்தல்; மற்றவையெல்லாம் பின்னர். எங்கே எப்பொழுது எப்படி என்ன சாப்பிடுவது என்பது தான் முதற்கவலை. தத்துவம் ஞானம் கலை எல்லாம் அப்புறந்தான். மகிழ்ச்சிக் கொண்டாட்டம், மதச்சடங்கு, தெய்வ ஆராதனை, திறப்புவிழா, கலியாணம், இழவு—முக்கியமான நிகழ்ச்சி எதுவாயிருந்தாலும் சரியே—வயிற்றுப் பூசைக்கு ஏற்பாடின்றி நடவாது!

* *

பிரயாணம் செய்வோரைப் பாருங்கள். பொருட்காட்சி, கோயில்விழா, சட்டசபை, மகாநாடு, சிற்பம், சங்கீதம் ஆ!—எவ்வளவு எவ்வளவு அற்புதமான காட்சிகளைக்காண அவர்கள் செல்கிறார்கள்! ஆனால்—இவற்றுடன் அவர்கள் திருப்தியடைகிறார்களோ? இல்லை. "எல்லாம் சரி ஐயா! உணவு விஷயம் என்ன? நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கும்?" என்று கேட்கிறார்கள். மக்களில் மிகப்பெரும்பான்மையோரின் இருதயத்தை ஊடுருவி நோக்கினால், அவர்கள் மிகுதியும் ஆசைப்படுவது நல்லுணவே என்று காண்போம். இளமைப்பருவத்திலிருந்து கடுமையான தண்டனை எது? ஒரு வேளை பட்டினி! அல்லது உப்பில்லாச் சோறு! கைத்தொழிலாளிகளில் அதிகமான சம்பளம் பெறுவோர் யார்? சமையற்காரர்கள்! பெண்கள் சிலர் கூடினால் முதன்மையாகப் பேசும் விஷயம் யாது? "எங்கள் வீட்டில் இது சமையல்; உங்கள் வீட்டில் என்ன சமையல்?" என்பதுவே. ஒரு நகரத்தின் கடைத்தெருவுக்குச் சென்று அங்கே அதிகமாக விற்கப்படும் பொருள்கள் யாவை என்று பாருங்கள்; உணவுப் பொருள்களும், அலங்காரப் பொருள்களுமேயாம். பணக்காரர்கள், ஏழைகள் படித்தவர்கள், படியாதவர்கள் எல்லாரும் பெருந்திண்டி ஆசையில் ஒற்றுமைப்பட்டவர்களே. ஆனால் பணக்காரர்களும், படித்தவர்களும் அவ்வாசை தங்களுக்கில்லாததுபோல் பாசாங்கு செய்கிறார். ஆனால் ஒரே ஒருநாள் அவர்களுக்கு வழக்கமான உணவு இல்லாமற் போகட்டும், அப்போது உண்மை வெளியாகும்!

* *

இத்தகைய நிலைமை முற்றும் இயல்பானதேயாம். வயிறு உண்மையில் பசிக்கும்போது பசியாறுவதற்காகமட்டுமே உணவுகொள்ளுவது என்னும் உறுதி ஏற்படாதவரையில், உணவைப் பற்றிய சிந்தனை ஓயாது இருந்து கொண்டுதானிருக்கும். மனிதர் நாவின் சுவைக்காகச் சாப்பிடும் வரை, உணவருந்துவதை ஒரு சுகபோகமாகக் கருதும் வரை, உணவுக்கவலைக்கு எல்லையில்லை யெனலாம். அவசியத்துக்கு அளவுண்டு; ஆசைக்கு அளவுண்டோ? அவசியத்தைப் பூர்த்தி செய்யலாம். சுகபோக ஆசையைத் திருப்தி செய்ய முடியுமோ? அவசியத்துக்காக உணவருந்துவோன் சாதாரண ரொட்டி, சோறு அல்லது கூழ் அருந்தித் திருப்தி யடைவான், ஆனால் இன்பத்துக்காக உணவருந்துவோனுக்கு எத்தெந்த வகையில் என்னென்ன சுவையுடன் எவ்வளவு பதார்த்தங்கள் தான் உண்டு என்று வரையறுக்க முடியுமா? (வரும்.)

ந. ச.

# ஸ்ரீமான் ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் தர்க்க சங்கம் ஒன்று 27—2—27-ல் ஸ்ரீமான் அர். அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான் சு. உ. வெற்றிவேல் நாடார் அவர்கள் "பொருள்" என்னும் விஷயத்தைப்பற்றி தர்க்க ரூபமாக, விரிந்த இவ்வுலகத்து, பொருளில்லாத இடத்து எவ்விதப் பிரயோசனமும் இல்லை எனவும், மூதறிஞர்களும் பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை என முடிவு கூறி விட்டார்கள் எனவும், கல்வியை யடைய வேண்டுமானாலும் செல்வம் இல்லாத இடத்துக் காலம் இயலாதெனவும், செல்வத்தாலேயே தான் எக்காரியமும் நிர்வகிக்கப்படவேண்டுமெனவும், ஆகையால் செல்வம்வேண்டுவதவசியமென நீண்ட நேரம்பேசினார்கள். அதன்பின்னர் "கல்வி" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமான் அரு. சு. அருணாசலம், நீரிற்குமிழியைப் போன்று பொருட் செல்வம், க்ஷணநேரத்தில் தோன்றி மறையும் இயல்புடையதென்றும், எந்நேரமும், கண்ணிமையைப் பாதுகாப்பதுபோல் வெகு ஜாக்கிரதையுடன் காவல் புரியாவிடில், கள்வர் கையில் போவதுடன், பொருளுடன் போகாமல் நமது உயிருக்கும் ஆபத்து ஏற்படும்; அத்துடன் பிறருக்கு அளித்தால் குறைவுபடும், செல்வம் என்ற பதத்திலேயே "செல்வோம்" யாரிடமும் தங்கியிருக்க மாட்டோம் என்ற அர்த்தமிருக்கிறதெனவும், அதேபோன்று செல்வம் யாரிடத்திலும் நிலைத்திருப்பதில்லையென்றும், காலையில் குபேரன் என்று காதில் வயிரக் கடுக்கன், கையில் வெள்ளித்தடி சுத்தப் பட்டு உடையுடன் மோட்டார் வாகனத்தில் உல்லாசமாக சவாரி வந்தவன், அதே மாலையில் வியாபாரத்தினால் ஏற்பட்ட துரதிஷ்டத்தினால் அவன் வகைக்குச் சரக்கேற்றி வந்த கப்பல் சமுத்திரத்திலாழ்ந்து, கடன் கொடுத்தவர்கள் வந்து கழுத்தைப்பிடித்து ஐஸ்வரியம் அனைத்தையும் கவர கோவணாண்டியாகிவிடுகிறான் என்றும் முன்பேசிய நண்பர் நிலையற்ற பொருளில் அபிமானம் வைத்திருப்பதற்குவிசனிப்பதாகவும் கூறி கல்விச் செல்வம், 'அறம், பொருள், இன்பம், வீடும்' பயக்குமென்றும், இகலோகத்திலும், பரலோகத்திலும், இன்பசாகரத்திலிருத்துமென்றும், பிறவிப்பயனையே அறிவிப்பது என்றும், ஆன்மார்த்த ஞானம் அடையச் செய்வது என்றும், "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை" எனவும் கூறிமுடித்தார். இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார் குலமித்திரன்

அக்ஷய ஸு மாசி மீ உ௰௪ உ

## கிராம முன்னேற்ற வேலைகள்.

ஆதியில் கிராமங்கள்தான் உண்டாயின. பல கிராமத்தார்களும் தங்கள் இருப்பிடம் விட்டு நகர்ந்து வந்தொன்று கூடிய இடமே நகரமென்று பெருமையான ஒரு பெயரைப் பெற்றுளது. தற்போது நகர வாழ்க்கை ஒரு வகையில் நரக வாழ்க்கையாய்க் காணப்படினும், நகரத்தில் இகலோக வாழ்க்கைக்குப் பல சாதனங்களுண்டென்று கிராமத்தார் பலரும் நகரத்தையே நாடுகிறார்கள். இதனால் கிராம நிர்மாணங்கள் சீர்கெட்டு மனித வாழ்க்கையின் தத்துவங்களும், நமது தேச பூர்வீகாச்சார அனுஷ்டானங்களும் மாறிக்கொண்டும்வருகின்றன. குடிசைத் தொழில்கள் கெட்டு அடிமைத் தனமும், பஞ்சமும் அதிகரித்துவந்திருக்கின்றன. இக்குறைகளை எல்லாம் அரசாங்கத்தார்கள் கவனிக்கவில்லை. அரசாங்கம் சரியில்லையென்று சொல்லிக்கொண்டு வரும் தேச அபிமானிகளும் கவனிக்கவில்லை. அவர்கள் பெரிய நகரங்களிலே காங்கிரஸ் கூடுவதும், இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் தேவை யென்று விளம்பரஞ் செய்வதும்தான் அவர்கள் வேலையாயிருந்து வந்தது. பெரிய படிப்பாளிகளெல்லாம் காங்கிரஸை உத்தியோக விளம்பர சபையாகவே கருதினார்கள். கவர்ன்மெண்டாரும் யார் காங்கிரஸின் முக்கிய மனிதராய்க் காணப்படுகிறாரோ அவரை உடனே ஒரு உத்தியோகத்திலேற்றிக்காட்டி தங்கள்வலைக்குள்ப்போட்டுக் கொள்ளுவார்கள். இவ்வாறு சுமார் முப்பத்தைந்து வருஷங்களாகக் காங்கிரஸ் நகர வாழ்க்கையிலிருந்து பெரிய உத்தியோகங்களை நாடினதேயன்றி கிராமங்களைக் கிஞ்சித்தேனும் பார்க்கவில்லை.

மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸில் வந்து புகுந்த பிறகுதான் கிராம முன்னேற்றத்தைக் கவனிக்கலானது. கிராம நிர்மாணம் சரியாயிருக்க வேண்டும்; கிராம வாழ்க்கையையேபெரிதாய்க்கருத வேண்டும்; கிராம ஜனங்கள் திருந்த வேண்டும்; கிராமத் தொழில் விருத்தியாக வேண்டும்; கிராம ஜனங்களைத் துணைக் கொள்ளல் வேண்டும்; சுயராஜ்ய தாகம் கிராமங்களுக்கு உண்டாக வேண்டும் என்றதோர் பெரிய வேலையைத் துவக்கி காங்கிரஸ் முகத்தை கிராமங்களின்பக்கம்திருப்பிவைத்தார். அதன் பிறகு தான் மனிதர்களுக்குக் கோழைத்தனம் நீங்கி ஆண்டன்மை யுடன் விளங்குந் தன்மை ஏற்பட்டுளது.

பின்னர் சுயராஜ்யக் கட்சியொன்றுண்டானபோது ஸி. ஆர். தாஸும் கிராம முன்னேற்றத்தையே கருதி வேலைத் திட்டங்களேற்படுத்தினர். சுயராஜ்யக் கட்சியின்கவனம்கிராமத்திலுமிருக்கிறதென்பதை முக்கியமாய் மனதில்வைத்துக்கொண்டேதான் மகாத்மா காந்தி அக்கட்சிக் கொள்கையையும் ஒரு சிறிது ஆதரிக்க முன் வந்தார். தாஸுக்குப் பிறகு அக்கட்சி கிராமத்தை மறந்தது அக்கட்சிக்கும்குறைவுகள் பல நேர்ந்தன இதனால், தேசம் முன்னேற வேண்டுமானால் கிராமங்களின் முன்னேற்றத்தை முதலாவது கவனிக்க வேண்டியது தேசாபிமானிகளின் முதற் கடமையென்று விளங்குகிறது.

நாடார் மகாஜன சங்கமும் மத்திய காலத்தில் கிராமப் பிரசாரங்களை அதிதீவிரமாக நடத்தியதிலிருந்தே நாடார் மகாஜன சங்கமும் தற்போதய மேலான நிலைமைக்கு வர மார்க்கமிருந்தது. இன்னும் கிராம நிர்மாணத் திட்டங்களை அதிகமாய் நிறைவேற்ற வேண்டியதிருக்கிறது. நாடார் மகாநாடுகளில் செய்த தீர்மானங்களனைத்தும் இன்னும் ஏட்டிலிருந்தே வருகின்றன. பாடசாலைகள் ஏற்படுத்துதல், பெண்கல்வியைக்கவனித்தல், வாசகசாலைகளேற்படுத்துதல், கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்தல்முதலிய பல தீர்மானங்கள் ஒவ்வொரு மகாநாட்டிலும் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றன. இவைகளெல்லாம் எந்த நகரங்களிலில்லை? எங்குமிருக்கின்றன. மற்றுருக்கு வேண்டும்? கிராமங்களுக்கன்றோ? கிராமங்களின் முன்னேற்றமே நகர முன்னேற்றத்திற்களவு கோலாயிருக்கிறது. எவ்வளவுக்கு கிராமங்களிலுள்ள நாடார்கள் கல்வி, செல்வம், கைத்தொழில், ஆசார சீர்திருத்தம் முதலியவைகளிற் சிறந்து விளங்குகின்றார்களோ, அவ்வளவே நாடார் மகாஜன சங்கத்தின் பெருமையும் பிரகாசமாய்த் தோன்றும். முன்னேற்றமுள்ள சமுகமென்று குறிப்பிடவுங் கூடும். ஆகையால் மகாஜன சங்கம் செய்த பல தீர்மானங்களின்படி அனுஷ்டானத்திலும் கொண்டுவர மகாஜன சங்க நிர்வாகஸ்தர்கள் முயலல்வேண்டும்.

திறமையான பிரசாரகர்களில் ஜில்லாவுக் கொருவரையாவது அனுப்பி மீண்டும் வேலை யாரம்பிக்க வேண்டும். கிராமங்களின் சக்திக்கேற்றவாறு பாடசாலைகளோ, சங்கங்களோ, வாசகசாலைகளோ ஏற்படுத்தச் செய்யலாம். அவைகளை அவர்களே நிர்வகிக்கும்படியும் செய்யலாம். மிகச் சிறு கிராமங்களாயிருந்தால் நாலைந்து கிராமங்களைப் பிணைத்து பொதுவான ஓரிடத்தில் பாடசாலை யமைக்கலாம். ஒன்றுக்குமிபலாத கிராமங்களுக்கென்ன செய்யலாமென்பதையும்பிரசாரகர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். ஏழைகளில் திறமையுள்ள மாணவர்களைப் பொறுக்கி எடுக்கலாம். இவைகளெல்லாம் திறமையுள்ள பிரசாரகர்களால் இலகுவாய் முடியக் கூடியனவே யென்றாலும், தலைவர்களுடைய சுற்றுப்பிரயாணங்களும் அடிக்கடி இருக்கவேண்டும். மென்மேலும் உற்சாகமுண்டாகவும், உண்மை கண்டுணரவும் குலாபிமானத் தலைவர்கள் கிராமத்தில் திருஷ்டிவைக்க வேண்டியது அவசியம். கிராமப் பஞ்சாயத்து, தாலுகாக் கூட்டம், ஜில்லாக் கான்பரன்ஸ் ஆகியவைகளெல்லாம் நடைபெறுவதற்குப்பிரசாரகர்கள் அவசியம் வேண்டும். ஆகையால்

## விருதுநகர்

### ஜஸ்டிஸ் தினக்கொண்டாட்டம்.

ஜஸ்டிஸ் தினமாகிய 26—2—1927 சனிக்கிழமை இவ்வூர் பிராமணரல்லாத வாலிபர் சங்கத்தாரால் ஜஸ்டிஸ் பத்திரிகையின் கொள்கையையும், அப்பத்திரிகை பொதுஜனங்களுக்குச் செய்துவரும் ஊழியத்தையும், அதை ஆதரிக்கவேண்டியது உண்மையான தேசாபிமானி ஒவ்வொருவரின் கடமை என்பதையும் பொதுஜனங்கள் உணரும்படி விரிவான ஓர் பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

### கூட்டம்.

அன்று மாலை 6 மணிக்கு ரெயில்வே பீடர்ரோடு சௌ. ம. ச. ம. அவர்களின் கிட்டங்கியின் மேல்மாடியில் பிராமணர் அல்லாத வாலிபர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் டீ. வி. கைலாசஞ் செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது. ஆதித்திராவிடர்கள் உள்பட ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி தோன்றிய காரணத்தைப்பற்றியும், கக்ஷியின் நோக்கத்தைப்பற்றியும், பிராமணரல்லாதாருக்குள் இருக்கவேண்டிய ஒற்றுமையைப் பற்றியும். இக்காலத்தில் பத்திரிகையின் வாயிலாகத்தான் பொதுஜனங்களுக்கு விஷயத்தை அறிவிக்க வேண்டியிருப்பதால் ஜஸ்டிஸ், திராவிடன், குடியரசு ஆகிய பத்திரிகைகளை விசேஷமாகப் பரப்புவதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்றும், முறையே ஸ்ரீமான்கள் ஹரிஹர உபாத்தியாயர் துரைராஜ்பிள்ளை, எம். பி. சுந்தர பாண்டியநாடார், வி. வி. ராமசாமிநாடார் இவர்கள் விரிவாக எடுத்துப் பேசினார்கள். அக்கிராசனர் முடிவுரையில் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி பிராமணரல்லாதார் முன்னேற வேண்டுமானால் ஜஸ்டிஸ் கக்ஷியையும் அதைச்சேர்ந்த பத்திரிகைகளையும் ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் ஆதரிக்க வேண்டுவது கடமையென்று பேசி முடித்தார். வந்தேமாதரத்துடன் கூட்டம் கலைந்தது.

### சமபந்தி போஜனம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஜஸ்டிஸ் தினக்கொண்டாட்டத்தை முன்னிட்டு பிராமணரல்லாதாருக்குள் ஒற்றுமையை நிதர்சனமாகக் காட்டும் பொருட்டு இவ்வூருக்கு தெற்கே சாத்தூர் ரஸ்தாவில் உள்ள அ. சு. சொ. சு. த. அவர்களின் அழகிய சிங்காரத்தோப்பில் சமபந்தி போஜனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நளபாக சக்ரவர்த்தி மிஸ்டர் எஸ். எஸ். பாலப்ப நாடாரால் அறுசுவைபதார்த்தங்களுடன் போஜனம் தயார் செய்யப்பட்டது. திராவிடமக்களுள் பல வகுப்பார்களாகிய பிள்ளை, செட்டியார், நாடார், நாயுடு, தேவர், ஆதித்திராவிடர் முதலிய எல்லா வகுப்பினரும் ஓரேபந்தியில் அமர்ந்து சந்தோஷமாகப் போஜனம் அருந்தினார்கள். சகல வகுப்பினர்களும் ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாக அளவளாவி மாலைப்பொழுதை அந்த இன்பமாகக் கழித்தனர். மாலை 6 மணிக்கு சிற்றுண்டி நடைபெற்றது.

கே. சம்பந்தன்,

காரியதரிசி,

பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்.

---

சமீபத்திற் கூடப்போகிற நாடார் மகாஜன சங்கம் கௌன்ஸிலில் திறமையான பிரசாரகர்களை நியமித்து கிராமப் பிரசாரஞ் செய்ய முதலேற்பாடு செய்வதுடன் இவ்வருடம்மகாநாட்டை எங்கேகூட்டுகிறதென்பதையும் ஆலோசிக்குமென்று நம்புகிறோம். மகாத்மா காந்தியடிகள் ஏப்ரல் மாதம் நம் தென்னாடு விஜயம் செய்வார்களென்று திட்டமாய்த் தெரிவதால் அதற்கு முன்னுடியே நம் மகாநாடு கூடும் முயற்சியைத் துரிதமாய்ப் பார்க்க வேண்டுகின்றோம்.

## வரவுசெலவு திட்டம்.

### இந்தியா அரசாங்கம்.

### மாகாணக் கப்பம் ஒழிக்கப்பட்டது.

### இராணுவச் செலவு உயர்கிறது.

1926–27 ஸூக்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 130 கோடியே 43 லக்ஷம். எதிர்பார்க்கப்பட்ட செலவு 130 கோடியே 38 லக்ஷம். ஆனால் உண்மையில்ஆண்டு முடிவில் கணக்குப் பார்க்கப்பட்டதில் வருமானம் 130 கோடியே 25 லக்ஷமும், செலவு 127 கோடியே 15 லக்ஷமும் ஆகியிருக்கிறது. ஆகவே கடந்த ஆண்டில் 3 கோடியே 10 லக்ஷம் ரூபாய் மீதப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பார்க்கப்பட்டதை விட 67 லக்ஷம் ரூபாய் ராணுவத்தில் மட்டும் அதிகமாய்ச் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

இனி 1927-28 ஸூத்துக்கு எதிர்பார்க்கப்படும் வருமானம் 128 கோடியே 96 லக்ஷம். செலவு 125 கோடியே 26 லக்ஷம். இந்த வகையில் 3 கோடியே 70 லக்ஷம் ரூபாய் மீதப்படலாமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நாணய மாற்று விகிதத்தில் மாறுதல் ஏற்பட்டால் பள்ளம் விழும் என்று தெரிகிறது.

### இவ்வருடம் குறைக்கப்பட்ட வரிகள்.

(1) மாட்டுத்தோல் ஏற்றுமதி வரி ரத்து செய்யப்பட்டது. (2) மோட்டார் இறக்குமதி வரி 100-க்கு 30 ஆக இருந்ததை 21 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. (3) மோட்டார் டயர் வரி 100-க்கு 30 ஆக இருந்ததை 20 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (4) பாங்கி செக்குகளுக்கு ஒரு அணா வரி எடுக்கப்பட்டிருக்கிறது. (5) தரிசன உண்டியல்களுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லையென தள்ளப்பட்டது. சுருட்டு புகையிலையின் மீதுள்ள இறக்குமதி வரி மட்டும் 1 ரூபாயிலிருந்து $1\frac{1}{2}$ ரூபாயாக ஏற்றப்பட்டிருக்கிறது. மாகாணக் கப்பம் மகாணங்கள் அனைத்துக்கும் தள்ளப்பட்டது. இது வகையில் சென்னை மாகாணத்திற்குமட்டிலும் 165 லக்ஷம் ரூபாய் ஆதாயம்.

### சென்னை மாகாண அரசாங்கம்.

சென்னை மாகாண அரசாங்க வரவு செலவு திட்டப்படி 1926-27 ஸூத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 1634 லக்ஷத்து 3 ஆயிரம். செலவு 1665 லக்ஷத்து 77 ஆயிரம். ஆகவே 31 லக்ஷத்து 77 ஆயிரம் ரூபாய் பள்ளம் விழுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உண்மையில் ஆண்டு முடிவில் கணக்குப் பார்த்த திட்டம் கட்டியதிலிருந்து வருமானம் 1654 லக்ஷத்து 3 ஆயிரமும், செலவு 1617 லக்ஷத்து 81 ஆயிரமும் ஏற்பட்டிருக்கின்றன. பள்ளம் விழும் என எதிர்பார்க்கப்பட்டவிடத்தில் 36 லக்ஷத்து 22 ஆயிரம் ரூபாய் மீதம் ஏற்பட்டிருக்கிறது ஆச்சர்யமே.

இனி 1927--28 ஸூத்துக்கு எதிர்பார்க்கப்படும் வருமானம் 1654 லக்ஷத்து 80 ஆயிரம். செலவு 1724 லக்ஷத்து 13 ஆயிரம். ஆகவே 69 லக்ஷத்து 33 ஆயிரம் ரூபாய் பள்ளம் விழும்படியாக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வருடம் மாகாணக் கப்பம் இந்திய அரசாங்கத்தாரால் வஜா செய்யப்பட்டுவிட்டதால் சென்ற 1926--27-ல் மாகாணக் கப்பமாகக் கட்டப்பட்ட தொகை 165 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் இவ்வருடம் மிகுதிப்பட இடமிருப்பதைக் கொண்டு ஏற்கனவே 69 லட்சத்து 33 ஆயிரம் பள்ளம் விழும்படி தயார் செய்திருப்பதற்கு ஈடு செய்தால் 1927—28-க்கு 95 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மீதமாகும்படி யேற்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மகாத்மாவை வரவேற்க.

உலக சிரேஷ்டர் மகாத்மாகாந்தியடிகள் வருகின்ற ஏப்ரல் மாதம் நம் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும்போது விருதுநகருக்கும் அம்மகானை அழைக்க வேண்டுமென்று இந்நகர் ஜனங்களுக்கு இருந்த ஆவலை அறிந்து இந்நகர் நாடார் வாசகசாலை முக்கிய அங்கத்தினர்களும் மற்றும் அபிமானிகளும் இந்நகர் முக்கியஸ்தர்களை கக்ஷி பேதமின்றி தனித்தனியாகக் கண்டு பேசி அவர்களுடைய ஏகோபித்த சம்மதத்தின் பேரில் 27—2—27-ல் நாடார்கள் பஜனைப்பேட்டையிலுள்ள பஞ்சவர்த்தக ஹாலில் ஓர் பொதுக் கூட்டம் அதைப்பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்டது.

கூட்டத்துக்கு முக்கியஸ்தர்கள் அநேகர் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் சுப்பராயபக்தலுகாரு ஸ்ரீமான் சு. ப. ப. பொ. ஷண்முகசுந்தரநாடார் அவர்களை தலைமைவகிக்க வேண்டுமென்று பிரேரணை செய்தார். அதை எல்லோரும் ஏகமனதுடன் ஆதரிக்க ஸ்ரீமான் சண்முகசுந்தரநாடார் பலத்த கரகோஷத்துடன் தலைமை வகித்து மகாத்மாகாந்தியின் பெருமையையும் அவரை இந்நகருக்கு அழைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் அவருக்கு ஒரு தர்ப்பண முடிப்பு கொடுக்கவேண்டியதைப்பற்றியும்பேசினர் பின்புஸ்ரீமான்களான சுப்பராயபக்தலு, பெ. சுப்பிரமணியநாடார், 'நாடார் குல மித்திரன்' ஆசிரியர் முத்துநாடார், சால்வாடி அய்யர் ஆகிய இவர்களும் இதைப் பற்றிப்பேசினர்கள்.

பின்பு ஸ்ரீமான் சுப்பிரமணியநாடாரால் கீழ்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது.

1. காந்தியடிகள் சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும்போது இந்நகருக்கு அழைக்கவேண்டுமென்று தீர்மானித்து மகாத்மாகாந்தி விஜய அட்டவணையில் இந்நகரையும் சேர்த்துக்கொள்ளும்படி தமிழ்நாடு சர்க்கா சங்கக் காரியதரிசியை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகின்றது.

2. அவருக்கு அது சமயம் ரூ 5000 பணமுடிப்பொன்று கதர் அபிவிருத்திக்காகக் கொடுப்பதென்று முடிவு செய்கின்றது.

3. அவரைத் தகுந்த விதமாக வரவேற்பதற்காகவும் கூடி பணமுடிப்பு சேர்ப்பதற்காகவும் கீழே கண்ட கனவான்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கின்றது.

ல. பெ. ப. பச்சைக்கண்ணு நாடார் பிரஸிடெண்ட். எ. ப. த. சக்குசெட்டியார் வைஸ்பிரஸிடெண்ட். சுப்பராயபக்தலு, கி. பெ. சி. வ. பிரகாசம், உ. த. ப. இராமையநாடார், ம. சி. வெ. முத்துக்குமாருநாடார் காரியதரிசிகள். அ. கி. சொ. சு. சங்கரபாண்டியநாடார் பொக்கிஷதார். கமிட்டி மெம்பர்கள்—கலியாணசுந்தரமய்யர், வெ. கா. பு. இராமசாமிநாடார், சி. வ. சண்முகம்பிள்ளை, வெ. கா. மு. அருணாசலநாடார், அழகிரிசாமிநாயக்கர், சு. ப. சின்னையாநாடார், சால்வாடி அய்யர், தே. அ. மா. அருணசலநாடார், சோமசுந்தரமுதலியார், கூ. மு. அ. வ. கந்தசாமிநாடார், ல. த. பெ. வைத்திலிங்கநாடார், மு. அ. அ. தனுஷ்கோடிநாடார், முத்துச்சாமி ஆசாரி, கு. இராமசாமிநாடார், க. பெ. சங்கரலிங்கநாடார்.

பிரஸிடெண்ட் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

தங்களன்புள்ள,
கி. பெ. சி. வ. பிரகாசம்,
காரியதரிசி.
விருதுநகர் மகாத்மா வரவேற்புக் கமிட்டியார்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கௌன்ஸில் கூட்டம்.

நமது சங்கம் கவுன்ஸிலின் ஆர்டினரி மீட்டிங்கு 1927-ஹு மார்ச்சு மீ 12உ (அக்ஷய-ஹு மாசி மீ 29உ) சனிக்கிழமை மாலை 4-மணிமுதல் சங்கம் ஆபீஸில் நடைபெறும்.

மீட்டிங்குக்குத் தாங்கள் விஜயஞ்செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஆலோசிக்கப்படும் விஷயங்களாவன:—

1. 1926-ஹு டிசம்பர் மீ 31உ யோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும், வரவு செலவுகளையும் பற்றிய ரிப்போர்ட்டைக் கவனித்தல்.

2. ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதியின் அபிவிருத்தியைக் குறித்து 12—2—27ல் மதுரையில் கூடிய ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கில் நிறைவேற்றப்பெற்றிருக்கும் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வருவதைக் குறித்து ஆலோசித்தல்.

3. 1927-ஹு ஏப்ரல் மீ 1உ முதல் 1928-ஹு மார்ச்சு மீ 31உ முடியவுள்ள ஒரு வருடத்திற்கு வேலைத்திட்டம் தயாரிப்பதைக் குறித்து ஆலோசித்தல்.

4. நம்மவர்கள் வசிக்கும் முக்கியமான நகரங்களில் வசூலாகாதிருக்கும் தலைக்கட்டு வரியை தீவிரமாய் வசூலிப்பதைக் குறித்து கவனித்தல்.

5. சமீபத்தில் நடைபெறவிருக்கும் தேவஸ்தான கமிட்டி எலெக்ஷனைக் குறித்து திருநெல்வேலி ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார் அவர்களிடமிருந்து வந்திருக்கும் லெட்டரைக் கவனித்தல்.

6. 11-வது கான்பரன்ஸை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

7. காரிய தரிசிகளால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களைக் கவனித்தல்.

தவிர, சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்கள் கொண்டு வரும் தீர்மானங்களும் கவனிக்கப்படும்.

மேற்கண்ட விஷயங்கள் ஆலோசிக்கப்பட்ட பின்னர், அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்கப்படும்.

பா. ம. பாண்டிய நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
காரியதரிசிகள்.

## பிரிவுபசாரவிருந்து.

திருச்செந்தூர் தாலுகா காயாமொழி ஆதித்தமரபு திமிடக்கவி பௌத்திரரும், அருப்புக்கோட்டை சைவபாது க்ஷத்திரிய ஹைஸ்கூல் தலைமை தமிழ் பண்டிதரும், சர்வமத சம்மதரும், ஜாதிய சமரஸக் கருத்துள்ளவருமான ஸ்ரீமான் அ. குமரகுருபர ஆதித்த நாடார் அவர்கள் வரும் ஏப்ரல் மாதம் முதல்கொண்டு சென்னை "தமிழ் நாடு" தினப்பதிப்புக்கு உப ஆசிரியராகப் போவதை முன்னிட்டு அருப்புக்கோட்டை ஆ. கு. அ. இ. இளையபெருமாள்நாடார் அவர்கள் 4—3—27-ல் ஒரு விருந்து நடத்தி வைத்தார்கள். அவ்வமயம் நாடார்குல வாலிப முக்கியஸ்தர்களனைவரும் விஜயஞ்செய்து சிறப்பித்து கனம் பண்டிதரவர்களின் பெருமை குறித்து பலர் சொற்பொழிவு நிகழ்த்தினர். தற்போது இவ்விடம் விட்டுப் பிரிந்து போகவேண்டிய அவசியம் நேர்ந்தமை குறித்து நமக்கு வருத்தமேயெனினும் தங்களுடைய ஞாபகம் எப்போதும் தம்மிதயத்தே குடி கொண்டிருக்குமென்றும், தேச நலன் குறித்தும் சுய மரியாதை குறித்தும் எப்போதும் பாடுபட தாம் தயாராயிருப்பதாகவும், அதுபற்றியே சென்னை ஏகுவதாகவும் கனம் பண்டிதரவர்கள் அன்பு கனிந்த உளங்கொண்டு பதிலுரைத்தனர். வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் கலைந்தது.

## பஞ்சமால்நாடு.

### நதிகளும், பாய்ச்சானங்களும்.

திருநெல்வேலி ஜில்லா பஞ்சமால் நாட்டில் பூர்வகாலத்தில் மாதம் மும்மாரிபெய்து மண் மலைகளிலுள்ள பொய்கைகளும் ஓடைகளும் பெருகி வருஷம் மூன்று போகம் நஞ்சை விளைந்து செழிப்பாயிருந்திருக்கிறது. தற்காலம் அப்படி விளைகிறதற்கு மலை வெள்ளம் அவசியமாயிருக்கிறது. இதை உத்தேசித்து 50 வருடங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவுக்கு கலெக்டராயிருந்த பக்கிள் துரையென்பவரால் ஸ்ரீவைகுண்டத்தின் தாமிரவர்ணியில் ஒரு அணைகட்டி வடகால் தூத்துக்குடி வரைக்கும் தென்கால் திருச்செந்தூர் வரைக்கும் வெட்டி அநேக குளங்களும் ஏற்பட்டு பதினாயிரக்கணக்கான ஏக்கராவுக்கு மேல் நஞ்சைப்பயிராகி விவசாயமும் செழிப்படைந்து பேரீஸ்களும் அதிகப்பட்டிருக்கின்றன. பஞ்சமால் நாட்டில் கருமனையாறு, [illegible]யாறு, ஹனுமான்நதி முதலிய நதிகளும், ஓடைகளும் எத்தனையோ யிருந்தாலும், தாமிரவர்ணி நதி ஒன்றே சிறிது மழைகாலத்திலும் வெள்ளம் வரக்கூடியதும் நன்றாய் விளையக்கூடியதாயு மிருப்பதால் அதில் இன்னும் பலத்த வேலைகள் நடத்த வேண்டியதாயிருக்கிறது.

ஆதியில் கடம்பாக்குளம் மானு மாசிக்குள மாயிருந்த காலத்தில் கானங்குளத்துக்கு வந்த வாய்க்காலும் இப்போது வன ஓடையாயிருப்பது மான கடம்பாக்குளத்தின் பழைய வாய்க்காலைத் திறந்து மேலக்கானம், பூச்சிக்காடு, பொட்டல், காயாமொழி ரெவனியூபாரஸ்ட் கீழ்பக்கமாக ஆண்டிகள் கிணற்றுவரைக்கும் வாய்க்காலாக வெட்டி கிழக்கு முகமாகத் திருப்பித் தென்காஸில் விட்டுவிடலாம். இந்த வாய்க்காலுக்கு மேல்பக்க மிருக்கும் பெட்டைக்குளங்களையும் பெருக்கிக்கொள்ளலாம். ரெவனியூ பாரஸ்ட் தென்கிழக்கு மூலையிலிருந்து கிழக்கு முகமாக தட்டான் விளைமடைக்கு ஒரு கால் வெட்டிவிடலாம். இந்த வாய்க்கால் காயாமொழி, பள்ளிப்பத்து, கானம், நாலுமாவடி, கச்சினாவிளை முதலிய ஐந்து கிராமங்களிலும் வருவதால் இந்த ஐந்து கிராமங்களின் பஞ்சாயத்தார்களும் ஒத்துழைத்து இந்தப் பழையவாய்க்காலை வெட்டி நஞ்சை சாகுபடியாக்கக்கேட்டுக்கொள்கிறேன். தென்கரைக்குளத்து மறுகால் என்ற சாக்கல் ஓடைத் தண்ணீரையும் இருப்புப்பாதைக்குத் தெற்கே ஒரு வாய்க்கால் வெட்டிக்கொண்டு வந்து இந்தப்பழைய வாய்க்காலில் விடலாம்.

பாமன்குறிச்சி, மானுதெண்டுப்பத்து, செட்டியாபத்து இம்மூன்று கிராமங்கள்சடைய நேரிகுளமுடைந்த காலத்தில் மூழ்கடிக்கப்பட்டுப் போவதால் சடையநேரிக்குளத்திலிருந்து ஒருகால் வெட்டி கருவைக்குளம், குதிரைமொழிக்குளம், மாநாஞ்சிக்குளம், தாத்துவேலய்யன் குளம் முதலியவைகளுக்கு விட்டு தாத்துவேலய்யன் கோவில் கரைவழியாய் சிக்காச்சித் தருவைக்கு ஒரு மறுகாலும் வெட்டிவிட்டால் இம்மூன்று கிராமங்கள் மூழ்காமலும் சாகுபடிக்கும் வருமானத்துக்கும் பிரயோஜனமாகும். ஸ்ரீ வைகுண்டம் அணைக்கு 5 மைலுக்கு மேற்கில் ஒரு கிளைநதி பிரித்து சோகுளம் பாதையாக வெட்டி யாதொரு பிரயோசனமுமில்லாத கருமனையாற்றில் விடலாம். அந்த கருமனையாற்றில் சாத்தான்குளத்தில் ஒரு அணைகட்டி அதன் வடகால் திருச்செந்தூர் வரைக்கும் தென்கால் உவரி வரைக்கும் வெட்டி இதற்குள் வந்த பாகத்தில் அநேக குளங்களும் ஏற்பட்டால் ஒரு லட்சம் ஏக்கராவுக்கு மேல் நஞ்சை சாகுபடியாகும். செல்வம் மென்மேலும் தழைத்தோங்கும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் தூத்துக்குடி டிவிஷன் கிராமப் பஞ்சாயத்தார் மகாநாட்டில் இவ்விஷயங்களை ஆலோசித்து காரியத்தை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரும்படி வேண்டுகிறேன்.

களக்காட்டு மலையில் உற்பத்தியாகி தெற்கு முகமாய் கடலில் சங்கமமாகிற நம்பியாறு, ஹனுமான் நதியாகிய இரு

## அருப்புக்கோட்டை ஸ்ரீமான் முத்துச்சாமி நாடார் வாசகசாலை.

இரணைகாலில் 28-2-27ல் இரவு 9½ மணிக்கு வாசகசாலை ஹாலில் தர்க்கசங்கம் கூடியது. ஸ்ரீமான் திருமேனிநாதர் அவைத்தலைமை வகித்தார்.

"கல்வி"யையே கருதல் வேண்டும் என்று ஸ்ரீமான் ஆ. கு. அண்ணாமலை நாடார் உபந்நியாசித்தார். இதை ஆதரித்து ஸ்ரீமான்களான சி. வ. கு. சுப்பிரமணியன், அ. பெ. ரத்தின வேல்நாடார், பெ. வைத்திநாதர், சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர் பேசினர்கள்.

"செல்வம்" எல்லாவிதக்காரியங்களுக்கும் வேண்டுமென்று ஸ்ரீமான் க. அருணாசலம் பேசினார். இதை ஆதரித்து ஸ்ரீமான்களான பெ. சஞ்சீவிநாடார், ஆ. இ. அண்ணாமலை நாடார், சோ. கந்தசாமி மூப்பனார், கி. கருப்பையாபிள்ளை பேசினர்கள் என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

நதிகளும் ஆங்காங்கு புனைக்குளங்களுக்குப்பாய்ந்து சாகுபடியாவதும் சொற்ப மழைகாலத்தில் வறண்டுபோவது மாயிருக்கிறது. இதை உத்தேசித்து பக்கிள் துரை என்பவரால் ரிசர்வே செய்யப்பட்டு பேச்சிப்பாறை யருவியில் சில கட்டுமான வேலைகள் ஆரம்பமாயினும் துர் அதிஷ்டமாக இடையில் அயர்ந்து போயிற்று. பேச்சிப்பாறைத்தண்ணீரை நம்பியாற்றுக்கு விட்டு விஜயநாராயணன் குளத்துக்குத் திருப்பி தென்பக்கம் ஒருகால் திறந்து சமுத்திரக் கரைவரையிலும் நீர்ப்பாய்ச்சானங்களை விருத்திபண்ணிக் கொள்ளலாம். நம்பியாற்றில் வடபக்கம் ஒரு கிளைநதி பிரித்து கருமனையாற்றில் விடலாம். பேச்சிப்பாறைத் தண்ணீரை ஹனுமான் நதிக்குவிட்டு அந்த நதியில் இருந்து வாய்க்கால்களும் குளங்களும் ஏற்பட்டு கூடங்குளம் கன்னியாகுமரிவரை நஞ்சை பாய்ச்சானமாக்கிக் கொள்ளலாம். மாகஸிதைங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தத் தக்ஷிண நாட்டாரை சமஸ்த இந்துக்களையும் விட மகாராஜ பக்தர் என்று எப்போதும் மெச்சி வந்திருந்தாலும் அடிக்கடி ராஜதுரோகங்களை விளைந்திருக்கிற வடநாடுகளில இவர்கள் உண்டாக்கிய ஆற்றுக்கால் வளங்களில் நூறி லொருவேலை கூட சென்ற 102 ஆண்டுகளாக இத்தச்சீமையில் நடப்பிக்கவில்லை. அயோத்தியோ நாட்டில் ஒரு கால் வெட்டுவதற்கு 1919–20 ல் பத்துக்கோடி ரூபாயும் இன்னும் அநேக இடங்களில் கால்கள் வெட்டுவதற்கு பெருந்தொகைகளும் செலவழிக்கப்பட்டு வருவதற்கூடே பஞ்சமால் நாடு பூராவும் நீர்வளமாவதற்கு பத்துலட்சரூபாய் போதுமான தாயிருக்கும். நாஞ்சில் நாடானது வாய்க்கால்களால் நீர்ப்பாய்சானமாகிறது. பஞ்சமால் நாட்டையும் அப்படியே வாய்க்கால்களால் நீர்ப்பாய்ச்சலாம். அல்லது கிராமத்துக்கு குளங்கள் ஏற்படவேணடும். தாமிரவர்ணித் தண்ணீரையும் பேச்சிப்பாறைத் தண்ணீரையும் கொண்டு இவ்விதமாகக் குளம்போடும் பட்சத்தில் சிலலட்ச ஏக்கராநிலங்கள் நஞ்சையாகிவிடும். நாடார்களுக்குப் பேரீஸ் அதிகப்படுவதுடன் கவர்ன்மெண்டாருக்குத் தீர்வைப்பணம் வருவதற்காக இன்னொரு தாலுகாவும் ஏற்படுத்தவேண்டியது வரும். நாடார் ஓட்டுகள் ஒரு லட்சம் சேருமென்டதில் யாதொரு சந்தேகமுமில்லை. திருநெல்வேலி ஜில்லாவின் ஸ்தலசுய ஆட்சி ஸ்தானங்களில் நாடார்களே மெஜாரிட்டியுடன் சிறந்து விளங்குவார்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. திருநெல்வேலி ஜில்லா கிராமப் பஞ்சாயத்தார் மஹாநாடு சமீபத்தில் கூடப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அதில் கிராமமுன்னேற்றத்திற்குரிய அரிய பெரிய விஷயங்கள் தீர்மானமாகுமென்று எண்ணுகிறோம். இவ்விஷயத்தையும் மஹாநாட்டில் அமுலுக்குக் கொண்டு வந்து மதராஸ் கவர்ன்மெண்டாரையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அ. சுந்தரக்குமார் ஆதித்தநாடார்,
காயாமொழி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சர்க்காவின் விசேஷம்

### ராஜேந்திர பாபுவின் அபிப்பிராயம்.

மேனாட்டு அர்த்த சாஸ்திர தர்மங்களைப் பின்பற்றுவோருக்கு சர்க்காவிடத்தில் நம்பிக்கை ஏற்படாமலிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இயற்கையை வெற்றி பெறும் மேனாட்டு சாஸ்திரங்களின் மகிமையானது சாதாரண மனிதர்களுக்கு விசேஷ பிரமையை உண்டுபண்ணுவதும் சகஜம். மேனாட்டு சாஸ்திரங்களும், மேனாட்டு அர்த்த சாஸ்திர முறைகளும் உலகில் தோற்றுவித்திருக்கும் புதிய நிலைமையால் பொதுவாக இந்தியர்களும், முக்கியமாகப் படித்த இந்தியர்களும் பிரமை அடையாமலிருப்பதற்கில்லை. இருந்தாலும் மேனாட்டு அர்த்த சாஸ்திர தர்மங்களுக்கும் சர்க்காவின் பொருளாதார சக்திக்கும் உள்ள தாரதம்மியங்களை ஆராய்வாம்.

### மேனாட்டு அர்த்த சாஸ்திரக் கொள்கைகளால் ஏற்படும் கோளாமை.

மேனாட்டு அர்த்த சாஸ்திரிகள் மேனாட்டு சாஸ்திரங்களின் உதவியின் பயனாக வேண்டுவனவும் வேண்டாதனவும், ஆகாதவைகளுமான பல பொருள்களை உற்பத்தி செய்வித்து விட்டனர். மனிதனுடைய அபிவிருத்தியின் அளவானது அவனுக்கு ஏற்பட்டுள்ள தேவைகளைப் பொறுத்ததென்பது மேனாட்டு அர்த்த சாஸ்திரிகளின் கொள்கை. அது பண்டங்களுக்கு முதலில் தேவையை உண்டு பண்ணுகிறது; தேவை ஏற்பட்டபிறகு அந்தத் தேவையைப் பூர்த்திசெய்து வைக்கிறது. ஒருவித் தேவையைப் பூர்த்தி செய்து வைக்க முயற்சி செய்கையில் இதர தேவைகளையும் பூர்த்தி செய்து வைக்கிறது. பெருவாரியான தேவைகளை இயந்திரங்களின் மூலமாக அந்த பூர்த்தி செய்து வைக்கப்படுகிறது. இவ்விதம் பூர்த்தி செய்து வைப்பதற்காகச் செய்யும் முயற்சியில் உற்பத்தியானது தேவையைவிட அதிகமாகிவிடுகிறது. ஆனால் இயந்திரங்களுக்காகப் பெருவாரியான தொகையைப் போட்டிருப்பதால், ஒரு குறிப்பிட்ட விலைக்குக் கீழே இந்தப் பண்டங்களை விற்க முடிவதில்லை. இந்த உபரி சாமான்களை விற்பனை செய்ய வேறு மார்க்கெட்டுகளைத் தேடவேண்டியிருக்கிறது. இதனால் ரத்தக்களறியும், யுத்தங்களும் ஏற்படுகின்றன. இதில் இன்னொரு கெடுதலும ஏற்படுகிறது. இயந்திரங்களை உபயோகிப்பதால் பலருக்கு வேலையில்லாமற்போகிறது. இவ்விதம் வேலையில்லாது போகிறவர்களுக்கு வேறு வேலை கொடுக்க வேண்டும்; அல்லது அவர்கள் பட்டினி கிடந்து தவிக்க வேண்டும். சுதந்திரமடைந்தும், ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களின் மீது ஆதிக்கம் வகித்தும் வரும் ஐரோப்பிய நாடுகளில் கவர்ன்மெண்டாரும் முதலாளிகளும் சேர்ந்து இவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதற்காக புதிது புதிதாகப் பல தொழிற்சாலைகளையும், தொழில்களையும் ஆரம்பிக்கிறார்கள். மறுபடியும் அதே கதிதி ஏற்படுகிறது. இவர்களுடைய சாமான்கள் பிறதேசங்களில் போய் விழுவதால் அந்த தேசத்தில் ஜனங்களுக்கு வேலையில்லாது போகிறது. இது தான் இந்தியாவில் நடக்கிறுக்கிறது. வேலையை மிச்சப்படுத்தும் கருவிகள் பண்டங்களின் விலையைக் குறைக்கக்கூடும். ஆனால் பண்டங்களின் விலை குறைக்கப் படுவதற்கும் ஒரு எல்லையுண்டு. பண்டங்களின் விலை குறைவாக விருப்பதற்காக தேவை அதிகரித்துவிடுவதில்லை. தேவையானது அவரவருடைய பிரியத்தையும், சக்தியையும் பொறுத்திருக்கிறது. ஒருசாமான் விலை குறைவாக விருப்பதால் மிச்சப்படும் தொகையை வேறு சாமான்களை வாங்குவதற்காக சமூகத்தினர் செலவிட சாத்தியப்பட்டபோதிலும், பலருக்கு வேலையில்லாமற் போகையில் பண்டங்களை வாங்கும் சக்தி சமூகத்தினருக்குக் குறைகிறது.

### இயந்திரங்களால் ஏற்படும் நிலைமை.

மேனாடுகளில் இந்த வழியிலேயே சென்ற 150 வருஷ காலமாக தொழில்கள் நடந்து வந்திருக்கின்றன. நீராவியும், மின்சார சக்தியும் தொழில்த் துறையில் ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணிவிட்டன. பலர் செய்ய வேண்டிய வேலை சிலரால் சொற்ப காலத்திற்குள் முடிந்துவிடுகிறது. சாமானின் விலை குறைகிறது. ஆயினும் வேலையில்லாமற் போய்விடுவோருடைய நிலைமைக்குத் தகுந்த அளவு விலை குறைவதில்லை. இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். ரஸ்தாவைப் போடுவதற்காக 25/30 ஆட்கள் இழுக்கக் கூடிய உருளைக்குப் பதிலாக 2, 3 பேர்கள் வேலை செய்துவிடக்கூடிய ஸ்டீம் ரோலரை உபயோகிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஸ்டீம்ரோலர் சீக்கிரத்தில் வேலையைச் செய்து விடுகிறது. ஆனால் பலருக்கு வேலையில்லாமற் போனதற்குத் தகுந்த அளவு செலவு குறைவதில்லை. ஆட்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கும் பணம் நிலக்கரி வாங்குவதிலும், இயந்திர விலையில்ஒருபகுதியிலுமாக ஈடாகிவிடுகிறது. பெரிய தொழிற்சாலைகளில் இவ்வித நிலைமைதானிருந்து வருகிறது. இதனால் முதலாளிகள் கொழுக்கவும், தொழிலாளர்களுக்கு வேலையில்லாமற் போகவும் நேரிடுகிறது. வேலை யில்லாதவர்களுக்கு வேறு வேலையைத் தேடிக் கொடுக்க அந்தந்த தேசத்தினருக்கு இருந்து வரும் சக்தியின் தாமாஷாப்படி வேலையில்லாத் திண்டாட்டம் அந்த தேசத்திலிருந்து வருகிறது.

### சில பிரச்சினைகள்.

இவ்விதம் இயந்திரங்களின் மூலமாய்ப் பெருவாரியாக உற்பத்தி செய்வதால் உலகத்திற்கு அனுகூலமுண்டா? இந்தியாவிற்கு இந்த முறையால் அனுகூலமேற்பட்டிருக்கிறதா? முதல் கேள்வி பெரிய விஷயமாதலால் அதைப்பற்றி இங்கு விவாதிக்க சாத்தியமில்லை. இருந்தாலும் மேனாடுகளில் வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவது நிதர்சனமாகத் தெரிகிறது. ராஜீயத் துறையில் தங்களுக்கிருந்துவரும் ஆதிக்கத்தைக் கொண்டு தொழில் துறையில் அதிகமாக அபிவிருத்திபடையாமல் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இருந்துவரும் தேசங்களிலிருந்து பொருளாதாரத் துறையில் ஐரோப்பிய நாடுகள் அனுகூலமடைந்து வருவது இத் தேசங்களில் வெறுப்பையும் ஐரோப்பிய நாடுகளுக்குள் துவேஷத்தையும் உண்டு பண்ணி யிருக்கிறது. இவ்விதம் வெறுப்பு அதிகரித்து வருவதன் மூலமாக மேனாட்டுப் பண்டங்களுக்குக் கிராக்கி இந்த தேசங்களில் குறைந்து கொண்டு வரும். இவ்விதம் பெருவாரியாகப் பண்டங்கள் உற்பத்தி செய்வதால் அனர்த்தம் விளையக் கூடுமென்பதை புத்திசாலிகள் உணரத் தலைப்பட்டு விட்டனர்.

### பெருவாரியான உற்பத்தியால் விளையுங் கேடு.

இரண்டாவது கேள்வி தான் நம்மைப் பொறுத்த முக்கிய விஷயம். இந்தியா பெரிய தேசம்; ஏராளமான ஜனத் தொகையுடையது. இவர்களில் 100-க்கு 80 பேர்கள் விவசாயத்தை நம்பியவர்களாக இருக்கிறார்கள். விவசாய வேலைகள் இவர்களுடைய காலத்தில் ஐந்தில் இரண்டு பங்கைவிட அதிகமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஒழிந்த நேரங்களில் வேறு தொழில்களில் செலவிடுவது ஏற்கெனவே வழக்கமாக விருந்தது. அவ்விதம் ஒழிந்த நேரத்தில் சிரத்தையாகப் பண்டங்களை உற்பத்தி செய்ததால் பிற தேசங்களிலும் அவைகளுக்குக் கிராக்கியிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியானது இந்த நிலைமையை மாற்றிவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் இயந்திரங்களும் தலை காட்ட ஆரம்பித்துவிட்டன. ராஜீயச் செல்வாக்கைக் கொண்டு பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷார் லாபத்தைத் தேட ஆரம்பித்து விட்டார்கள். நெசவுத் தொழில் நமது நாட்டில் ஒழிந்து போனது பெரிய நஷ்டமாகி விட்டது. இந்தத் தொழிலை பிரிட்டிஷார் தங்களுடைய ராஜீயச் செல்வாக்கைக் கொண்டு அழித்து விட்டனர். இதன் பலனாக நூல் நூற்று, நெசவுத் தொழில் செய்து சம்பாதித்து வந்தவர்களுக்குப் பிழைப்பு இல்லாமற் போய்விட்டது. பெருவாரியாக உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் ஏற்பட்டது வேலையில்லாத் திண்டாட்டத்தையே அதிகப் படுத்தி விட்டது. விவசாயத் தொழில் செய்துவரும் பெருவாரியான ஜனங்கள் சாகுபடிக் காலங்களுக்கு இடையில் செய்யக்கூடிய வேலை கிடைத்தால் தான் செய்யலாம். இந்த இடைக்காலம் குறைவாக விருப்பதால் வெளியிடங்களுக்குப் போய் தொழில் செய்ய அவர்களால் முடிவதில்லை. இவ்வித நிலைமையில் சாகுபடித் தொழிலுக்கு அதிகப் பிரியமேற்பட்டுக் குடிகள் கசக்கிப் பிழியப்படுவதிலும் தொழில் செய்தே ஜீவிக்க வேண்டிய கோஷ்டி பெருகிவருவதிலும், பசியும் பிணியும் தாரித்திரியமும் நாட்டைப் பீடித்திருப்பதிலும் அதிசயமொன்றுமில்லை. இயந்திரங்களை உபயோகிப்பதால் வேலையற்றுப்போகும் பெருவாரியான ஜனங்களுக்கு வேறு வேலைகளைத் தேடிக் கொடுப்பது சாத்தியமாக விருந்தால் இந்த தேசத்தில் பண்டங்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதால் அனுகூலமுண்டு.

(தொடரும்.)

## பெருத்த அநியாயம்.

இதனால் பொதுஜன அபிமானிகள், கனதனவான்கள் ஆகிய அனைவருக்கும் தெரிவித்து நலன் செய்ய வேண்டிக் கொள்வதாவது:—

திருச்சி ஜில்லா, லால்குடி தாலுகா தாழக்குடி கிராமவாசிகளாகிய பி. தாதப் பல்லவராயர், சா. கந்தசாமிப் பல்லவராயர், பி. பரிமணப்பல்லவராயர் ஆகிய நாங்கள் எங்கள் குடும்பப் பெண்டு பிள்ளைகளுடன் எங்கள் வேண்டுதலை முன்னிட்டு 13-2-27உ ஞாயிறன்று காலையில் திருஆனைக்கா (ஜெம்புகேசுவரம்) சென்று அர்ச்சனை ஆராதனைகள் செய்து தரிசித்துவிட்டு, ஸ்ரீரங்கம் பெரிய கோவிலுக்குச் சென்று $10\frac{1}{2}$ மணிக்கு சுவாமி கோவில் மூலஸ்தானம் சென்று உள் நுழைந்தோம். அச்சமயம் அங்கிருந்த கொறட்டுமணியம் பிச்சுவய்யங்கார் எங்களை வெளியே போகச்செய்து, ஒவ்வொருவரும் 2 அணா வீதம் உண்டியலில் போட்டு உள் நுழையவேண்டும் என்றனர்.

இவ்விதம் போடுவது கட்டாயமா வரியா, இஷ்டத்தைப் பொறுத்தது தானே! எல்லோருக்கும் பொதுவாக ஏதோ எங்களால் இயன்ற 4 அணா 2-அணாப்போடுகிறோ மென்றோம். கூடாது, ஒவ்வொருவரும் 2-அணா வீதம் போட்டால்த்தான் உள்ளே வர வேண்டும் என்று வாசற்படியிலிருந்து தடுத்தார். நாங்கள் தாழக்குடி வாசியென்றும், பெருமாளுக்கு வருஷா வருஷம் 400 ரூபாய்க்குமேல் செலவுசெய்து அழைத்துத் திருவிழா நடத்தும் பக்தர்களாரென்றுஞ்சொல்லியும், எந்த ஆசாமியாராயிருந்தாலென்ன என்று தடுத்துவிட்டார். நாங்கள் கம்பத்தடிக்கு வந்து அங்கு எங்கள் தீபாராதனையைச் செய்துகொண்டு, டிரஸ்டி ஆபீசில் வந்து பார்க்க முக்கியமானவர்களில்லாததால் வீடுவந்து சேர்ந்தோம்.

இச்செய்தி, கம்பத்தடியண்டையிருந்த வேறு சிலருக்கும், அம்மன் கோவில் அர்ச்சகர், அர்ச்சனை வரி வசூல் செய்பவர் முதலிய சிலருக்கும் தெரியும். இவர்களும் இப்படி கட்டாயப் படுத்தாதது மிகத் திருப்தியாயிருந்தது.

மேற்கண்ட அநியாயம் திருவானைக் கோவில், சமையபுரம், திரிசிராமலை, பழனி முதலிய சிவாலயங்களில் இல்லாததும் வெறும் அநீததே.

பி. பரிமணப்பல்லவராயர்.

## திக்கு விஷயம்.

### ஸ்திரீகள் சுதந்திரம்.

மைசூர் சட்டசபையில் அங்கம்பெற ஸ்திரீகளுக்கும் சுதந்திரம் உண்டென்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவரப் பெற்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

### திருவனந்தபுரத்தில் ரயில்.

திருவாங்கூர் சமஸ்தான திவான் சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் திருவனந்தபுரம் ரெயில்வே ஸ்டேஷனைப் பெரிதாயமைக்கவும், தாக்கைக்கும் சாலைக்கும் ரயில் போக்கு வரத்து ஏற்படுத்தவும் ஆலோசனை நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார்கள்.

### விழியற்ற அறிஞர்கள்.

இங்கிலாந்தில் இதுவரை மூன்று குருடர்கள் பாரிஸ்டர் பரீக்ஷையிலும், நான்கு குருடர்கள் வக்கீல் பரீக்ஷையிலும் தேறியிருக்கிறார்களாம். சமீபத்தில் வக்கீல் பரீக்ஷையில் தேறிய 26 வயதுள்ள இங்கிரா என்பவர் இப்பரீக்ஷைக்கு 1600 புஸ்தகங்களைப் படித்திருக்கிறாராம். அனைத்தும் பிறர் வாசிக்கக் கேட்டுக் கொண்டவைகள் தானும்.

### உலகில் பெரியது.

உரோமாபுரியிலுள்ள அர்ச் இராயப்பர் கோயிலொன்றே உலகத்தில் பெரியதாம். அதன் நீளம் 698 அடி; உயரம் 437 அடி. 50000 ஜனங்கள் வரை ஒரே நேரத்திற் றங்கலாம்.

### நாதன் மொழி நாடாவிடில்.

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள பொன்னுசாமி என்பார் $1\frac{1}{2}$ வருடங்கட்கு முன்னர் தான் மணந்துகொண்ட பெண்ணை தாய் வீடு விட்டு வரும்படி எவ்வளவோ வேண்டியும் வருவதற்கு மார்க்கமில்லை. உடனே மாமியார் வீட்டிலேயே தான் தூக்கிட்டுக் கொண்டனனும்.

### பணப் பித்து.

திண்டிவனம் தாலுகா, ஜக்கம்பேட்டையிலுள்ள 18 வயதுள்ள இலட்சுமி யெனும் பெண் தனக்குத் தன் தாயார் வீட்டு மூலம் கிடைத்த சீதனப் பொருட்களை அபகரிக்கத் தனது கணவரும், மாமி மாமனும் பலவிதத்தில் துன்புறுத்தியதாகக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து அவர்களுக்கு காவல் தண்டனையும், அபராதமும் வாங்கிக் கொடுத்திருக்கின்றனளாம்.

### பணம், மேல் நாடு செல்லும் வகை.

எப்ரல் மீ 1உ முதல் அக்டோபர் மீ 31உ வரை ஏழு மாதங்களில் 1924-ல் ரூ 12110755 க்கும், 1925-ல் ரூ 13018440 க்கும், 1926-ல் ரூ 15236495 க்கும் வெளி நாடுகளிலிருந்து இந்தியாவில் மோட்டார் வண்டிகள் இறக்குமதியாயிருக்கின்றனவாம். மோட்டார்களே இந்த லக்ஷணத்திலிருந்தால் மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவைகளின் திறமோ சொல்லத் தரமன்று. அத்துடன் ஒவ்வொரு நிமிஷமும் அவைகளுக்கு வேண்டற்பாலனவான சில்லரைச் சாமான்களின் வரவோ பெருமிதம். ஏழை இந்தியாவின் மதியின்மை என்னே பாரீர்!

### ஸ்ரீரெங்கம் கோயில்.

ஸ்ரீரெங்கம் கோயில், செலவுக்குக் காணாத வரும்படியோடு கூடிய நிலைமையில் நடைபெற்று வருவதாக அதிகாரிகளால் சொல்லப்படுகிறது.

### சுயராஜ்யக் கட்சி நிலை.


காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்குள் அபிப்பிராயபேதங்கள் உண்டாயிருப்பதாக பராபரியாய்ச் சொல்லப்படினும், இதை உறுதிபடுத்தற்கு ஆஸ்பதமாக அதன் தலைவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையில்லை என்று பூசி மெழுகுகிறார்கள் எனத் தெரிகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அதிஷ்டம்! அதிஷ்டம்!! முந்துங்கள்!!!

அருப்புக்கோட்டை
"நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி
தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

மொத்தம் சீட்டுகள் 33000 சீட்டு 1-க்கு ரூ 1.



## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-வரு மே மீ 4 உ க்கு பிரபவ வரு சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக் கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ 1500 | 3-வது பிரைஸ் | ரூ 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200 க்குரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரை விழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இங்ஙனம்,
சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

## துண்டு துணுக்குகள்.

பெண்களின் மூக்கங்கள் சீசாவுக்குள்ளிருக்கும் மிட்டாய்கள் போலாம். ஆரம்பக் கஷ்டம் பின் அதேஷ்டமாம்.

பழைய உருளைக்கிழங்குகளை வேக வைக்கும்போது கொஞ்சம் சர்க்கரையை தண்ணீரில் சேர்த்துக் கொண்டால் நலமாம்.

ஹைகோர்ட் ஜட்ஜி ஸர். கிருஷ்ண நாயர் அவர்கள் 9 உ சென்னையில் காலஞ் சென்றார்.

சீனாவில் நடக்கும் சுதந்திரப் போரில் இந்தியக் கவர்ன்மெண்டு மூலம் இந்தியர்கள் உதவி செய்வாரென்பது முடியாதென்றும், அப்படி முடியாதென்பதை பிரிட்டிஷார்க்கு தகவிபாகவும், சீனர்களுக்கு விரோதமாகவும், இந்தியத் துருப்புகளை சீனாவுக்கு அனுப்பக் கூடாதென்று இந்தியா சட்டசபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு தடிபட்டுப் போய்விட்டதென்றும், ஆசையால் காயம்பட்ட சீன சோல்ஜர்களுக்கு வைத்திய உதவிச்சேனும் தொண்டர்களாக ஓராயிரம் இந்தியர்களாவது இது சமயம் செல்ல வேண்டுமென்று தொண்டர் படைத் தலைவர் ஸ்ரீமான் ஹார்டிகார் பிரஸ்தாபித்திருக்கிறார்.

பர்மியத் தலைவரான உத்தமர் குமார் இரண்டு வருட காலமாக இராஜீய விஷயமாகச் சிறையில் வதிந்து சென்றவாரத்தில் விடுதலையடைந்திருக்கிறார்.

மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்பரர் தேவஸ்தானத்தில் சேவக வேலை பார்த்து வந்த இராமசாமி சேர்வை என்பவர் தர்மகர்த்தா குப்புசாமி அய்யரைச் செருப்பாலடித்த குற்றத்திற்காக 4 மாத கடின காவல் தண்டனை அடைந்தார்.

மகாத்மா காந்தி கதர் நிதிக்கு சென்னை மாகாண முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் ரூ 1200 மும், சட்டசபைத் தலைவர் திரு. நரஸிம்மராஜு அவர்கள் ரூபாய் 500ம் கொடுத்திருக்கிறார்கள்.

மிஸ் கத்லீன் எனும் சீன மாது தனது 23 வது வயதில் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பரீக்ஷை தேறியிருக்கிறார்.

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும், கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர், பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை, ஜெயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் சாமான் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்
ஸ்ரீரங்கம்,
(திருச்சி.)

## "1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரகசியமை, சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் சொலுஷன், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தங்கவிலீட், சிகரெட்டு, தீக்குச்சி, ரோமசம்ஹாரி, அத்தர், பற்பொடி, நரைமயிர்களுக்குத் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. தனி விபரப் புத்தகம் இனாம்! ஏமாந்துபோகவேண்டாம். ஷை பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" என்னும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். சிலர் ஐந்தாறு போலிமுறைகளை ரூ 1½ 2 என்று விற்பதைப்பார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனாம்!

ஆர்ட்புக்ஸ் கம்பெனி,
13. திருச்சிராப்பள்ளி.

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் சேவிக்க இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடை பெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக் கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேஜர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது.



பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. சயிஸ் 6"–6"; பிளேட் 5½" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம், செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—
ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
மவுண்ட் ரோடு, மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!! சில பிரதிகளே கைவசமிருக்கின்றன,
என் ஏழைச் சகோதரர்களே! ஏன் கவலைப்படுகின்றீர்கள்?
50 ரூபாய் முதல் 500 ரூபாய்வரை மாதம் சம்பாதிக்கலாம்.

## கைத்தொழில் வணிக இரகஸ்யம்.

இதில் சோப்புகள், மெழுகுவர்த்தி, நெருப்புக்குச்சி, பெப்பர்மெண்ட், பிஸ்கத், கேக்குகள், வாசனை எண்ணெய்கள், சாம்பிராணிவர்த்திகள், பன்னீர், சர்பத்துகள், இங்கி, பூட் பாலீஷ், வார்னிஷ், சாயங்கள், பலவித மருந்துகள், காகிதம், பென்சல் முதலியவைகள் செய்யும் முறைகளுடன் 200 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் ரூ 1–8–0. உடனே எழுதுங்கள். எல்லாவிதமான தமிழ் புஸ்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

ஜயலக்ஷ்மி புஸ்தகசாலை,
64. வெங்கிடமேஸ்திரி வீதி, மண்ணடி, மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection